**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.251/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **ராஜேஸ்வரி** |
| Father's / Husband Name | : | **மயில்வாகனன்** |
| Address | : | **குளித்தலை, கரூர்** |
| Age | : | 49/2025 |

**தேதி : 17.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1ஐ தெரியாது. சாட்சி 2 தைலம்மை என்னுடைய அம்மா. என்னுடைய தாயார் 2021ம் ஆண்டு இறந்துவிட்டார். என்னுடைய அம்மா தாயுமானவன் என்பவருக்கு பவர் எழுதிக்கொடுத்திருந்தார். தாயுமானவன் இறந்துவிட்டார். என்னுடைய தாயாருக்கு சொந்தமான 7ம் நம்பர் பிளாட்டை விற்றுவிட்டேன். 2010ம் ஆண்டு ரெங்கராஜ் மகன் பச்சமுத்து என்பவர் என்னுடைய தாயாரின் போட்டோவை ஒட்டி போலி பத்திரம் தயார் செய்துகொண்டார். இந்திராணி என்பவர் தனக்கு எழுதிக்கொடுத்த பிளாட்டை மீண்டும் ஏன் விற்றுவிட்டீர்கள் என்று என்னிடம் வந்து கேட்டார். அந்த பத்திரத்தில் உள்ள கைரேகை மற்றும் போட்டோவை பார்த்தார்கள் அந்த பத்திரத்தில் உள்ள கைரேகை என்னுடைய தாயாருடையது இல்லை.

எங்களுக்கு சொந்தமில்லாத சர்வே எண் 384/6 இடத்தை எங்களுக்கு சொந்தமானது என்று ரெங்கராஜ் மகன் பச்சமுத்து என்பவர்

எழுதிக்கொடுத்துள்ளார். எங்களுக்கு சர்வே எண் 384/3 இடம்தான் பாத்தியப்பட்டது. இதுசம்மந்தமாக போலீஸார் என்னையும், என்னுடைய தாயாரையும் விசாரித்தார்கள். நாங்கள் பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னோம். போலீஸார் விசாரித்தபிறகுதான் எங்களுக்கு விவரம் தெரிந்தது.

**<u>1 முதல் 4 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீஸார் விசாரித்தபோது நீதிமன்றத்தில் தற்போது சொன்ன விவரங்களைத்தான் போலீஸாரிடம் சொன்னேன். போலீஸார் என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். 2012ம் ஆண்டு விசாரணை செய்தார்கள். தேதி, மாதம் ஞாபகமில்லை. ரெங்கராஜ் மகன் பச்சமுத்து என்பதும் கைரேகை மாறியுள்ளது என்ற விவரமும் போலீஸார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். எங்களுக்கு சொந்தமான 7ம் நம்பர் பிளாட் சர்வே எண். 384/3 ல் உள்ளது என்றால் சரிதான். 7ம் நம்பர் பிளார் என்னுடைய தாயார் தைலம்மை கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். என்னுடைய தாயார் சர்வே நம்பர் 384/6ல் தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றாலும், சர்வே நம்பர் 384/3ல் கிரயம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. போலீஸார் சொல்லிக்கொடுததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் தாயவுமானவனுக்கு எந்த பவர் பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒரு வசந்தா சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து தாயுமானவன் சர்வே எண். 384/6ல் ஒரு ஏக்கர் 38 செண்ட்டை பவர் பத்திரம் வாங்கினார் என்றாலும், அதில் உள்ள நான்கெல்லை வேறு என்றாலும் என்னுடைய தாயார் சர்வே எண். 384/6ல் 1 ஏக்கர் 40 செண்ட் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், அதன் நான்கெல்லைகள் வேறு என்றாலும் சரியல்ல. பச்சமுத்து சரியாக பவர் வாங்கியதான் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும், போலீஸார் சொன்னதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>5வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய தாயார் எப்போது இறந்தார் என்றால் 17.05.2021ம் தேதி இறந்தார். போலீஸார் என்னை எங்களது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். 2012ம் ஆண்டு விசாரித்தார்கள், தேதி, மாதம் ஞாபகமில்லை. என்னுடைய தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயார் எனக்கு 2008ல் பிளாட் எழுதிக்கொடுத்தார். நான் அந்த பிளாட்டை பாலமுருகன் என்பவருக்கு விற்றுவிட்டேன். அந்த சொத்தை என்னுடைய தாயார் யாரிடம் வாங்கினார் என்று ஞாபகமில்லை. பத்திரம் போலியானது என்று யார் சொல்லி தெரியும் என்றால் போலீஸார் சொல்லி தெரியும். சர்வே எண் 384/6ல் தான் என்னுடைய தாயாருக்கு சொத்து இருந்தது என்றாலும், சர்வே எண். 384/3ல் என்னுடைய தாயாருக்கு சொத்து இல்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண் ◌்மற்றும் மூலபத்திரங்கள் சரியாக இருந்ததால்தான் சார்பதிவாளர் பத்திரங்களை பதிவு செய்துள்ளார் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.